## பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை – 2017

---

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களினதும் பொழிப்புகளை உள்ளடக்கிய 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை அதிகாரச் சட்டத்தின் 50(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகார சபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது அவதானிப்புரைகளும் கருத்துரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவானதோர் அறிக்கை 2018 யூன் 11 ஆந் திகதியன்று அதிகாரசபையின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக் கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக் கூற்றுக்களை இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுபாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகார சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகார சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களால் எழும் தாக்கங்களைத் தவிர, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்

**இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07**

நியமத்தின் 69 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்தொன்று பயன்படுத்தப்படக்கூடிய நிலைமையை எய்தியதன் பின்னரே அதற்கான தேய்மானமும் மேற்கொள்ளப்பட வேண்டும். எவ்வாறாயினும், 2017 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் அதிகாரசபையை வந்தடையாத ரூபா 2,827,431 பெறுமதியான நடைமுறையல்லாத சொத்துக்களுக்கு ரூபா 282,743 தேய்மானமாகக் கணிப்பிடப்பட்டுக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

ஊழியர் நலன்களுக்கான பிற்கால நிதியேற்பாடு சம்பந்தமான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள் 3 முதல் 9 வரையிலானவற்றின் பிரகாரமும் 15 ஆம் பந்தியின் பிரகாரமும் சேவையின் பின்னரான ஊழியர்களது நலன்களுக்கான நிதியேற்பாடு சம்பந்தமாக நிறுவனங்களது மிக அண்மைய கால வெளியீடுகளின் பிரகாரம் எதிர்கால ஊழியர் சம்பள அதிகரிப்பு, ஊழியர் புரள்வு மற்றும் ஏனைய ஆயுட் கணிப்பு கொள்கையொன்றைக் கற்பனை அடிப்படையில் தயாரிக்க வேண்டுமாயினும், அவ்வாறானதொரு கொள்கையைத் தயாரித்திருக்கவில்லை. எனினும், ஊழியர்கள் இறுதியாகப் பெற்றுக்கொண்ட சம்பளம் மற்றும் சேவைக் காலம் என்பவற்றினது அடிப்படையில் பணிக்கொடைக்கான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அப்பணிக்கொடைக் கொடுப்பனவுக்கான நிதியேற்பாடு ரூபா 1,583,778 குறைத்துக் காட்டப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டினது மிகை அதேயளவு அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அலுவலக உபகரணங்கள் மற்றும் மோட்டார் வாகனங்கள் என்பன ரூபா 3,518,530 அதிகரித்த கிரயத்துடன் தேய்மானத்திற்குள்ளாகியிருந்தன.

(ஆ) 2014, 2015, 2016 ஆம் ஆண்டுகளின் பொருட்டு 2017 மே 30 ஆந் திகதி கொடுப்பனவு செய்யப்பட்ட ஊழியர் மிகையூதியம் ரூபா 12,011,000 ஆகும். இதனை முன்னைய ஆண்டுகளது இலாபத்தில் சீராக்கல் செய்வதற்குப் பதிலாக மீளாய்வாண்டினது செலவினமாகக் காட்டியமையால், மீளாய்வாண்டினது இலாபம் அதேயளவு குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. மேலும், நிதிக்கூற்றுக்களில் மீளாய்வாண்டிற்கான ஊழியர் மிகையூதியத்திற்கான மதிப்பீட்டினைத் தயாரித்து நிதியேற்பாட்டை மேற்கொண்டிருக்கவில்லை.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமை அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையினது XXIV அத்தியாயத்தின் 4.5 ஆம் பிரிவு | 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு வேலையிலிருந்து இடை நிறுத்தம் செய்யப்பட்டிருந்த 10 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 881,760 கூட்டுத் தொகையையுடைய கடன் மீதி அறவிடப்பட வேண்டியிருந்தது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரின் நிதிப்பிரமாணம் 371(2) | முற்பணத்தைப் பெற்றதற்கான பணி முடிவடைந்ததும் அதனைத் தீர்த்து வைக்க வேண்டுமாயினும், மனித வளக் கணக்காய்விற்கென தனியார் நிறுவனம் ஒன்றுக்கு வழங்கிய ரூபா 219,000 முற்பணமானது 2018 யூன் 30 ஆந் திகதியளவிலும் தீர்த்துவைக்கப்படாதிருந்தது. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், அதிகார சபையினது மீளாய்வாண்டிற்கான நிதிப் பெறுபேறு ரூபா 50,830,861 மிகையாகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 6,660,137 ஆகும். இதனால் நிதிப் பெறுபேற்றில் ரூபா 44,170,724 அதிகரிப்புக் காணப்பட்டது. மீண்டுவரும் மானியம் ரூபா 88,652,320 அதிகரித்தமையும் ஆளுக்குரிய வேதனம், ஏனைய செயற்பாட்டுச் செலவினம் மற்றும் கட்டிட வாடகை என்பன முறையே ரூபா 34,361,943, ரூபா 8,764,413, ரூபா 6,685,806 என அதிகரித்தமையும் இவ்வதிகரிப்புக்கான பிரதான காரணமாகும்.

மீளாய்வாண்டினதும் முன்னைய 4 ஆண்டுகளதும் நிதிப் பெறுபேறுகளைப் பகுப்பாய்வு செய்கையில் மீளாய்வாண்டு வரை தொடர்ச்சியாக மிகை நிலவியபோதும் அது வருடாந்தம் மாற்றங்களுக்குள்ளாகியிருந்தது. ஊழியர்களது ஊழியத்தையும் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கான தேய்மானத்தையும் நிதிப் பெறுபேற்றில் மீண்டும் சீராக்கல் செய்ததன் பின்னர் 2013 ஆம் ஆண்டில் ரூபா 190,252,253 ஆகவிருந்த பங்களிப்பு 2017 ஆம் ஆண்டில் ரூபா 343,944,401 வரை அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

------------------------------------------------------------

### 4.1 செயலாற்றல்

--------------------------------

#### 4.1.1 திட்டமிடல்

--------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டினது செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் பாடசாலைச் சிறுவர்களுக்கு விழிப்பூட்டும் 300 நிகழ்ச்சித்திட்டங்கள் அடங்கலாக 600 நிகழ்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்ததுடன், அதன் பொருட்டு மீளாய்வாண்டின்போது ரூபா 8,474,299 செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின்போது அந்நிகழ்ச்சித் திட்டங்களுள் 105 மாத்திரமே நடாத்தப்பட்டிருந்ததுடன் 03 மாவட்டங்களில் பாடசாலைச் சிறுவர்களுக்கு விழிப்பூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் எதுவுமே நடைபெறவுமில்லை.

(ஆ) பாடசாலைச் சிறுவர்களது எண்ணிக்கையின் அடிப்படையில் குறித்த மாவட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கும் விதத்திலும் சகல மாவட்டங்களையும் உள்ளடக்குமாறும் பாடசாலைச் சிறுவர்களுக்கு விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களைத் திட்டமிட்டு அமுல்படுத்தியிருக்கவில்லை.

(இ) 2007 யூலை 11 ஆந் திகதிய 1505/11 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட பண்டங்களை விற்பனை செய்யும் சகல இறக்குமதியாளர்களும் விநியோகத்தர்களும் அதற்கமைய நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனரா என்பதைப் பரிசீலிப்பதற்கு அதிகார சபை ஆய்வினை மேற்கொண்டிருந்தது. அதன்போது, வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட பண்டங்களது இறக்குமதியாளர்களதும் விநியோகத்தர்களதும் விபரம் குறிப்பிடப்பட்டிராமையும், அதி கூடிய சில்லறை விலையை குறிப்பிட்டிராமையும், சில பண்டங்களது விலைகளின் அடிப்படையில் கடையுரிமையாளர்கள் மீண்டும் விலைகளைக் குறிப்பிட்டிருந்தமையும் போன்ற விடயங்கள் அவதானிக்கப்பட்டதால், மேற்படி வர்த்தமானி அறிவித்தல் நடைமுறைப்படுத்தப்படாமை அவதானிக்கப்பட்டதுடன், அக்கட்டளைகளை அமுல்படுத்துவது சம்பந்தமாக அதிகார சபை போதியளவு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கவுமில்லை.

(ஈ) அதிகார சபையை அமைப்பதற்குரிய அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவில் அதிகார சபைக்குக் கிடைக்கப் பெறும் புகார்களைத் தீர்த்து வைப்பது சம்பந்தமாக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அதிகார சபைக்குக் கிடைக்கப்பெறும் புகார்கள் மற்றும் அவற்றைத் தீர்த்து வைத்தல் என்பன தொடர்பாக முறையான பதிவேடுகளோ தரவு முறைமையோ பேணப்படாமையால் தீர்த்து வைக்கப்படாத புகார்கள் தொடர்பாகவும் தீர்த்து வைப்பதில் நிலவும் காலதாமதம் தொடர்பாகவும் பரிசீலிக்க முடியாதுள்ளதுடன் பாவனையாளர்கள் சுரண்டப்படுவதற்கு எதிராக நிவாரணத்தை வழங்குவதற்கும் பாவனையார்களது உயிர்களுக்கும் உடைமைகளுக்கும் தீங்கு விளைவிக்கும் பொருட்களையும் சேவைகளையும் வழங்குவதற்கு எதிராகப் பாவனையாளர்களைப் பாதுகாப்பது போன்ற அதிகார சபையின் நோக்கமும் நிறைவேறுவதில் தடை ஏற்படுவதாக அவதானிக்கப்பட்டது.

(உ) 2008 ஆம் ஆண்டு முதல் அரிசியானது குறிப்பிடத்தக்க பண்டமாகப் பெயரிடப்பட்டிருந்தபோதும், அதிகாரச்சட்டத்தின் 20(5) ஆம் பிரிவின் பிரகாரம் 3 வகை அரிசிகளின் பொருட்டு அவ்வவ்போது அதி கூடிய சில்லறை விலைகளை நிர்ணயித்து வர்த்தமானி அறிவித்தல்கள் விடுவிக்கப்பட்டிருந்தன. 2017 டிசெம்பர் 26 ஆந் திகதி வெளியிடப்பட்ட 2051/8 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் 1 கிலோ கிராம் நாட்டரிசியின் அதிகூடிய விலை மாத்திரமே நிர்ணயிக்கப்பட்டதால் ஏனைய வகை அரிசிகளின் சில்லறை விலைகள் கட்டுப்பாட்டுக்கு உட்படாது போயிருந்தன.

(ஊ) மீளாய்வாண்டின்போது அதிகார சபை விற்பனைக் கூடங்களில் மேற்கொண்ட மொத்த சுற்றி வளைப்புகள் 25,605 ஆகும். இவற்றுள் 38 சதவீதமானவை பண்டங்களது விலைகளைக் குறிப்பிடுதல், லேபல் இடல், பக்கெட்டுக்களில் அடைத்தல் சம்பந்தப்பட்டனவாகவும் 26.98 சதவீதமானவை விலைப்பட்டியல் காட்சிக்கு வைக்கப்படாமையும் சம்பந்தப்பட்டனவாகும். எவ்வாறாயினும், குறிப்பிட்ட விலைக்குக் கூடுதலாக விற்பனை செய்தல், பண்டங்களையும் சேவைகளையும் வழங்குவதற்குரிய நியமங்களும் வடிவங்களும், குறிப்பிடத்தக்க பண்டங்களதும் சேவைகளதும் விலைகள் மற்றும் அதி கூடிய விலை நிர்ணயிக்கப்பட்ட பண்டத்தை விற்பனை செய்வது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மொத்த சுற்றிவளைப்புகள் 4.08, 0.48, 0.06, 9.1 எனக் குறைந்த சதவீதத்திலேயே அமைந்திருந்தன. மேலும், அதிகார சபை அதிகாரச் சட்டத்தின் 29 ஆம் பிரிவின் பிரகாரம் வர்த்தகரால் விளம்பரப் பலகை வழங்கப்படுதல் சம்பந்தமான சுற்றிவிளைப்புகள் எதுவுமே நடைபெறவில்லை.

(எ) 2016, 2017 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்புகளில் முறையே 201 மற்றும் 434 சுற்றிவளைப்புகள் சம்பந்தமாக வழக்குகள் தொடரப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முறையான அங்கீகாரமின்றி நியமிக்கப்பட்ட மதியுரையாளர்களுக்குச் சம்பளமும் படியும் வழங்குவது சட்டபூர்வமற்றதாகும் என முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் 2016 ஆகஸ்ட் 11 ஆந் திகதிய DMS/1736/VOL1 எனும் கடிதத்தின் மூலம் தெரியப்படுத்தியிருந்தபோதும், பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் 2016 ஆம் ஆண்டில் 05 மதியுரையாளர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். 2015 ஏப்ரல் 01 ஆந் திகதிய அமப/15/0180/613/008 எனும் இலக்கமுடைய அமைச்சரவைத் தீர்மானத்தின் அடிப்படையில் அம்மதியுரையாளர்கள் நியமனஞ் செய்யப்பட்ட நாள் தொடக்கம் 2017 டிசெம்பர் 31 வரை மதியுரையாளர்களுக்கான படி, எரிபொருளுக்கான படி, போக்குவரத்துப் படி என ரூபா 5,490,720 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) கைத்தொழில் மற்றும் வணிக நடவடிக்கைகளுக்கான அமைச்சினது வாகனமொன்றைப் பழுதுபார்ப்பதற்கு அதிகார சபை 2016 ஆம் ஆண்டில் ரூபா 2,275,187 செலவிட்டிருந்தபோதும், பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 9.3.1 (அ) பந்தியின் பிரகாரம் அமைச்சினது செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. 08 மாதங்கள் மாத்திரமே அவ்வாகனத்தைப் பயன்படுத்தியதன் பின்னர் மீண்டும் அது அவ்வமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. 2017 யூன் 15 ஆந் திகதிய CAA/HRA/VEH/24 எனும் இலக்கமுடைய கடிதத்தின்படி இப்பழுதுபார்த்தலுக்கான செலவினம் அமைச்சினால் மீள நிரப்பப்படுவதற்கான கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தபோதும், கணக்காய்வுத் தினம் வரை அமைச்சிடமிருந்து அச்செலவினம் மீள் நிரப்பப்பட்டிருக்கவில்லை.

## 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

பல்வேறு காரணங்களின் நிமித்தம் அதிகார சபை அறவிடும் தண்டப் பணம் சம்பந்தமாக நீதிமன்றங்களிலிருந்து பெறப்படும் ஆவணங்களையும் நிறுவனம் பேணிவரும் பதிவேடுகளையும் வெவ்வேறாக இனங்காண முடியாதிருந்தமையால் 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் இனங்காண முடியாது போன தண்டப் பண மீதி ரூபா 796,003 முதல் ரூபா 10,006,585 வரை அதிகரித்திருந்ததுடன், பெற வேண்டிய தண்டப் பண மீதி ரூபா 4,229,491 முதல் ரூபா 14,635,071 வரை அதிகரித்துமிருந்தது.

## 4.4 பதவியணி நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விடுவித்தல் அடிப்படையிலும் பதில் கடமை அடிப்படையிலும் அதிகார சபையின் பணிப்பாளர் நாயகப் பதவிக்கு உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்ததுடன், 2010 மார்ச் 25 முதல் நிரந்தர உத்தியோகத்தர் ஒருவர் நியமனஞ் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாவட்டங்களில் உள்ள விற்பனைக் கூடங்களது எண்ணிக்கை மற்றும் சனத்தொகை எண்ணிக்கை எனும் அடிப்படையில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நியமிக்கப்பட வேண்டிய விசாரணை உத்தியோகத்தர்களது எண்ணிக்கை தீர்மானிக்கப்பட்டிருந்தபோதும், 2018 மார்ச் 28 ஆந் திகதியளவில் 06 மாவட்டங்களில் 87 உத்தியோகத்தர்கள் மிகையாகவும் ஏனைய 06 மாவட்டங்களில் 92 உத்தியோகத்தர்கள் குறைவாகவும் இருந்தனர்.

## 5. நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி

## 5.1 நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தியை எய்துதல்

நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டிற்கான ''நிகழ்ச்சி நிரலின்'' பிரகாரம் அதிகார சபை தனது நோக்கமாகவும் இலக்காகவும் முறையே ''பொறுப்புடனான பாவனை மற்றும் உற்பத்தி'', ''தரம்மிக்க பண்டங்களையும் உற்பத்தி செய்தலும் விநியோகித்தலும்'' போன்ற நோக்கங்களை இனங்கண்டுகொண்டிருந்ததுடன், அந்த நோக்கங்களையும் இலக்கையும் அளவிடுவதற்கான சுட்டிக் காட்டிகள், அமைப்பு மற்றும் தரவுகளுக்கான தளங்களை அதிகார சபை இனங்கண்டிருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 6.1 ஆண்டிறிக்கைகளைப் பராளுமன்றத்தில் முன்வைத்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் ஆண்டறிக்கையைப் பராளுமன்றத்தில் முன்வைக்க வேண்டுமாயினும், 2016 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையை அதிகார சபை கணக்காய்வுத் தினம் வரை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கவில்லை.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகளிலும் கட்டுப்பாடுகளிலும் உள்ள குறைபாடுகள் அவ்வவ்போது அதிகார சபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமை மற்றும் கட்டுப்பாட்டுத் துறை | அவதானிப்புகள் |
|---|---|
| (அ) ஊழியர் கடன் அறவீடு | ஊழியர் கடனை அறவிடுவதில் தாபன விதிக் கோவையைக் கடைப்படிக்காமை, ஊழியர் கடன் காலப்பகுப்பாய்வைத் தயாரிக்காமை. |
| (ஆ) தண்டப் பணச் சேகரிப்பு | தண்டப் பணச் சேகரிப்பு நாளதுவரையாக்கப்படாமை. |
| (இ) உத்தியோகத்தர்களைப் பயிற்றுவித்தல் | சகல உத்தியோகத்தர்களையும் உள்ளடக்குமாறு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை அமுலாக்காமை. |
| (ஈ) புகார்களைத் தீர்த்து வைத்தல் | புகார்களுக்கான ஆவணங்கள் பூரணப்படுத்தப்படாதும் நாளதுவரையாக்கப்படாதுமிருத்தல், புகார்களைத் தீர்த்து வைப்பதில் தாமதம் மற்றும் வருடாந்த இலக்குகளை ஏற்படுத்தாதிருத்தல் |